# தீ குளிக்கும் ஆண் மரம்



ஜே. பிரேஸ்கான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீ குளிக்கும் ஆண் மரம்

ஜே.பிரோஸ்கான்

J. FIROSKHAN (JP)
Justice of Peace (Whole Island)
Regd.No: 21/07/නැප/මූද/479
No : 92/4, Umar Rali Street,
Mahroof Nagar ,Kinniya-03.

வெளியீடு:
பேனா பப்ளிகேஷன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Thee Kulikkum Aan Maram: Poems
Author: J. Firoskhan
Address: 31, 'Umar Rali Street, Maharoof Nagar, Kinniya-03. | Tp: 0779300397 | Copyright: Author | First Edition: 2012 April | Published by: pena Pablication, Kinniya | Cover Designed & Layout: AMRA Graphics & Printers, Kinniya - 077 5153 943 | Typed: J. Firoskhan | Pages: 84 | Printed by: A.J Prints, Dehiwala | Price: 250/= | ISBN: 978-955-0932-00-9

'தீ குளிக்கும் ஆண் மரம்' கவிதைகள்
ஆசிரியர்: ஜே. பிரோஸ்கான்
பதிப்புரிமை: ஜமால்தீன் பிரோஸ்கான் | முகவரி: 31. உமர் ரழி வீதி. மஹ்ரூப் நகர், கிண்ணியா - 03. இலங்கை. | கைபேசி: 0779300397 | முதற்பதிப்பு: 2012 ஏப்ரல் | வெளியீடு: பேனா பப்ளிகேஷன் (கிண்ணியா) | தட்டச்சு: ஜே.பிரோஸ்கான் | அட்டை, பக்க வடிவமைப்பு: அம்ரா க்ரபிக்ஸ் எண்ட் ப்ரின்டர்ஸ், கிண்ணியா - 077 5153 943 | அச்சுப் பதிப்பு: ஏ ஜே பிரின்ட்ஸ், தெஹிவலை | பக்கம்: 84 | விலை: 250/= | ச.த.நூ.இல: 978-955-0932-00-9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது
எல்லா
தந்தைமாருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீ குளிக்கும் ஆண் மரத்தின் ஒரு சொட்டு நிழல்

- ஜே. பிரோஸ்கான் -

நேற்றைய கவிதை வடிவங்களைத் தாண்டிச் செல்ல வேண்டிய கட்டாய வரம்புக்குள் காலம் என்னை மிக வேகமாக இழுத்துச் சென்றதன் பிரதிபலிப்பே இந்தப் படைப்பு. ஒரு படைப்பாளன் நீண்ட வாசிப்பின் நெருங்குதலால் கவரப்படுதல் என்பது ஆச்சரியமில்லை. அவ்வகையான குறிக்கோளுடன் நவீன படைப்புக்களை முயன்ற வரை மேய்ந்ததன் விளைவே இந்தத் தீக்குளிக்கும் ஆண் மரம்.

புரிதல் அங்காங்கே தொங்கி நிற்பதாய் சில திசைகளிலிருந்தும் பல படைப்பாளிகளிடமிருந்தும் ஒரு மந்தமான வரவேற்பு இந்தப் பின் நவீனத்துவக் கவிதைகளுக்கு இருந்தாலும் இன்றைய காலத்தினூடே பலர் இந்த வடிவத்தை மிகவும் விரும்பியும் கட்டாயத்திலும், எடுக்கவும் படிக்கவும் நெருக்கமாக முனைவதை காணமுடிகிறது. இந்த கவிதையின் இன்னுமொரு பாரிமாணம் கூட நாளை வரலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது காலத்திற்கேற்ப அலங்காரத்தின் தேவைப்பாட்டோடு ஒவ்வொரு படைப்பாளியையும் தேடல் செய்ய வைக்கும் என்பதில் சந்தேகமில்லை. அப்படிப் புதிய புதிய உடைப்பில் ஒவ்வொரு படைப்பையும் படைப்பாளிகள் ஈழத்திற்கு முகவுரையாகத் தர வேண்டும்.

மாறாக, ஒரு எழுத்தாளனின் படைப்புக்குத் தடைக்கல் இடக் கூடாது. தமக்கு முடியாது என்பதால் அப்படைப்பை தமக்கு ஏற்ற வாறு விமர்சிப்பது, ஒட்டு மொத்தமாகப் புரிதல் செய்ய முடியா தென்றெல்லாம் கருத்தைப் பகிர்வதை விட இலக்கியத்தின் வளர்ச்சி பற்றிச் சந்தோசிப்பதே சாலச் சிறந்ததாகும்.

அதன் அடிப்படையில்தான் எனதும் இந்தத் "தீக்குளிக்கும் ஆண் மரம்" தொகுதியை எனது நேற்றைய வழியிலிருந்து உடைப்புச்செய்து, ஒரு புதிய கருத்தாடலுடன் கொஞ்சம் தயக்கத்துடன் படைப் பாளிகள், விமர்சகர்கள், வாசகர்களின் சுவைத்தலுக்கு கொண்டு வந்திருக்கிறேன்.

நாளாந்த வாழ்தலின் நிகழ்வுகள், வலி, காயம் என்பதே இந்தத் "தீ குளிக்கும் ஆண் மரம்". நிச்சயம் இந்தப் படைப்பும் ஒரு புதிய அடையாளமாக எனக்கு விளங்கும் என்ற உளச் சந்தோசத்துடன் உங்கள் முன் வருகிறேன்.

*மஃறிபுக்குப் பின்னான பொழுதொன்றில்*
*சோளங்கதிர் உண்டபடி...*
***20120204***

*31, உமர் ரழி வீதி,*
*மஃரூப் நகர்,*
*கிண்ணியா -03,*
*இலங்கை.*
*கைபேசி: 0779300397*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈரமுள்ள நன்றி

தாய், தந்தை, சகோதரி, கலாபூஷணம் ஏ.எம்.எம். அலி, நேயம் நியாஸ், ஏ. நஸ்புள்ளாஹ், கிண்ணியா சபருள்ளா, கலாநிதி கே.எம்.எம். இக்பால், ஹஸன்ஜீ, வீ.எம். அன்ஸார், கவிமணி அ. கௌரிதாசன், கலாபூஷணம் றாஹிலா மஜீத்நூன், எஸ். பாயிஸா அலி, ஜெனீரா ஹைருல் அமான், நாஸிக் மஜீத், எம்.ரீ. சஜாத், ஏ.கே. முஜாரத், அமீரலி, இ. இர்சாத், எம்.ரீ. சபறுள்ளாகான், நியாஸ் முஸாதிக், மூதூர் மூகைதீன், நந்தினி சேவியர், ஆசிரியர் சதாத், எம்.எம். அலி அக்பர், பஷீர் அலி, நஸார் இஜாஸ், நிலாம்தீன், எஸ். அருளானந்தம், திருமலை நவம், கே.எஸ். சிவகுமாரன், சட்டத்தரணி ஜெகஜோதி, நாச்சியாதீவு பர்வீன், ஏ.ஆர். நவாஸ், ஏ.எச். ரைசாத், எம்.ரீ. ஹபீபுள்ளா, பீ.ரீ. அஸீஸ், ஏ.சீ. ஹஸ்ஸான் (G.S), அதிபர் நிஸார், எச்.எம். ஹலால்தீன், அஸ்ட்ரா ப்ரின்டர்ஸ் சிவபாலன், ஜமீல், தாரிக் (நீறோ), மீள்பார்வை, எங்கள் தேசம், தினகரன் வாரமஞ்சரி, தினக்குரல், வீரகேசரி, ஓசை, நீங்களும் எழுதலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீ குளிக்கும் ஆண் மரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காய்க்க ஆசைப்பட்டு பூத்த முருங்கைப் பூ

கிளை நிறைந்து பூத்த முருங்கை மரத்தைப் பார்த்து
மனசு உள்ளுக்குள் சந்தோச மூச்சுவிட்டது
லாபத்திற்கான அதிகபட்சப் பூக்களின் நிறைவுடன்
இம்முறை எம்முறையுமில்லாதபடி என் மரத்தில்
பூக்களும் பிஞ்சுகளுமாகப் பணம் காய்த்திருக்கிறது.
இரவுத் துயிலில் ராஜ கனவுடன் உறங்கி விழித்தப்போது
ராத்திரி பெய்த மழையில் உதிர்ந்து மடிந்துபோயிருந்தது
எனதான கனவும்
காயாக மாறிவிடுவேன் என்ற கர்வத்தோடு
பூத்த முருங்கைப் பூவும்.

2011

□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே. பிரோஸ்கான்



# தலையணை மந்திரம்

நாசுக்கான வார்த்தையொன்று
நிமிடத் துளியொன்றில் தூண்டில் செய்யும்
செவிடாகிப்போன செவிப்பறை கூடத்
திரையகற்றித் தலைதூக்கிப் பார்ப்பதான
காலைப்பொழுதினில் நடந்தேறிய
கருப்புச் சம்பவத்தின் ஆட்பறிப்பு நூர்ந்துபோக,
துணைவியிட்ட தலையணை மந்திரம்
பற்றியதான மருந்தாகுதல் அந்தப் படுக்கையறைக்கும்
கருமை விசிறிய ராவுக்கும் தெரிந்ததான உண்மையும்
கணவன் கோபம் தீர்ந்து பெட்டிப் பாம்பாய்
அடங்கிப்போன நிகழ்வுதனை ரகசியமுடைத்து
தம்பட்டமடித்தது விடியல் செய்த கோழி.
2011

❑❑❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாட்கள் நாட்களாக நகரட்டும்

மாதங்களாக நகர்கின்ற
வருடத்திற்குள்தான் நாளையெண்ணி
காத்திருக்கும் எதிர்காலக் கனவுகள் விரிந்து கிடக்கின்றன
மாதம் மாதங்களாகவும் வாரம் வாரங்களாகவும்
நாள் நாட்களாகவும் கடக்கும் போதுதான்
சில கனவுகள்கூடப் பலிக்கக்கூடும்.

2011

❑❑❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறவை மோகம்

பறவைகள் வளர்ப்பதற்கான மோகத்தினில்
பெரியப்பாவின் இளைய மகனிடம் விறகு வெட்டுவதற்கான
உன் பயணத்தின் போதெல்லாம் எனக்கான பறவைக் குஞ்சொன்றை
பிடித்துத் தருவாயென்றால் பெருமிதமெனக்கு.
இப்படியாய்த் தினம் மண் தின்னும் குழந்தையைக் கண்டிப்பதைப்
போலான என் கண்டித்தலை ஏற்று அவன்
காட்டிலிருந்து ஒரு நாள் கிளிக் குஞ்சொன்றை
நீட்டிப் பரவசப்படுத்திய பொழுதொன்றில்
உண்ணாத உறக்கத்துடன் விடிந்தது பொழுது.
நேற்றைய சந்தோசத்தின் வெற்றிடங்களெல்லாம்
கிளிக் குஞ்சின் கீச்சலில் நிரம்பித் தழும்பியது.
நாட்கள் ஒன்றோடு நின்று விடாமல் மாதங்களாக நகர்ந்த
காலத்திற்குள் கிளியின் முதல் பேச்சு என் பெயராகத்தான்
இருக்க வேண்டுமென்ற ஆசையில் கற்றுக்கொடுத்ததெல்லாம்
என் பெயராக இருக்க,
உச்சரிக்கும் வயதாகி கிளி நிற்கையில்
வீட்டுப் பூனை கிளியின் வருகைக்கப்புறம் தான்
ஒதுக்கப்பட்டதாக எண்ணிய சாத்தானின் நிமிடமொன்றில்
குதறி எறியப்பட்ட கிளியைப் பார்த்தபோது
என்னைப் போலவே பக்கத்து வீட்டு மாமிக்கும்
பறவை வளர்ப்பதற்கான ஆசை செத்தே போயிருக்கும்.
2011

□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே. பிரோஸ்கான்



# இழப்பு

நேற்றுவரை எம் வீட்டின் எச்சிச் சோற்றை
உண்டு வளர்ந்த அந்த நாய் யாரோ
ஒருத்தரால் விசம் புகுத்தப்பட்டதாய்
என் இளைய சகோதரி என் உம்மாவிடம்
மிக வருத்தத்துடன் சொல்லிக்கொண்டிருந்த
விடியும் பொழுதுக்கு முன் நான் திடுக்கிட்டு
எழுந்தபோது மேலும் சகோதரி
என்னைப் பார்த்து தம்பி இங்கே பாருடா..
அந்த நாய்க்கு யாரோ நாசமாகிப்போக விசம் வைத்திட்டாங்கடா.
ஒன்று புரிந்திற்று
உயிரோடு வாழும்போது அந்த நாய் எங்களுக்கு பிடிக்காத எத்தனையோ
விடயங்களையும் விளைவுகளையும்கூட ஏற்படுத்தியிருக்கிறது.
ஆனால் அது கண்முன்னே இறப்பதில்
அவர்களுக்கு உடன்பாடில்லை
அதனிழப்பு கஷ்டமானதுதான்.
இப்படித்தானொன்று அருகாமையிலிருக்கும்போது
அதன் இருத்தலின் வலிமை புரியாது
அது இல்லாமல்போகும்போதுதான்
கஷ்டமும் கவலையும் காற்றைப்போல்
வீசிக்கொண்டிருக்கும் போல.

2011

□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே. பிரோஸ்கான்



# குழந்தையின் மழை


மழையில் நனைந்த குழந்தையை
கண்டித்தாள் மனைவி.
குழந்தையோ
குளியலறையைக் காட்டி
நீயும்
அப்பாவும்
தினம் தினம்
அங்கு நனைறீங்களே என்றாள்.
அவளின் குறும்புக் கேள்விக்கு
பதில் சொல்லத் தெரியாமல் இப்படித்தான்
சில நேரம் தவிப்புக்குள்ளாகி விடுகிறோம்!
2012

❑❑❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே. பிரோஸ்கான்



# கோபத்தில் எழுதிய கவிதை

அது சந்தோசம் போர்த்திய பொழுது
கடற்கரையை நோக்கியதான பயணிப்பு
ஆணும் ஆணுமாய்
பெண்ணும் பெண்ணுமாய்
ஆணும் பெண்ணுமாய்
அவர்களும் இவர்களுமாய்
இன்னும் இன்னுமாய்
கடல் நுரைபோல பொங்கிய
சனநெரிசலுக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூசுதலில்லாமல் தீக்குச்சியுரசல்போல
இனம் புரியாதபடி,
அவர்கள் எறும்பின்
நெருக்கத்தோடு நகர்கையில்
அந்தப் பெருநாள் நாளில்
தூதரின் வார்த்தை நசுங்கியே போயிற்று
அடிவயிற்றில் பிசையும் வலியோடு
கவலைக்குள் சிக்கி
நொறுங்கியே போனேன்.
மார்க்கம் அவமானப்பட்டுப்போனதாக
சொல்லிய நண்பனின்
கனல் கக்கிய பார்வையில்
எனக்கும் தெளிவாயிற்று
இப்படியான பெருநாள் தேவைதானா
நம் சமூகத்துக்கென்று.
வெறுத்திற்றுப் போனது மனசு
கடற்கரையை மட்டுமல்ல
அன்றைய பெருநாளையும்தான்.
2011
□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெ. பிரோஸ்கான்



# என்னை ஏமாற்றிய பொழுது

என்னை ஏமாற்றிய பொழுதுகளுக்கு
என் கண்டனத்தைத் தெரிவிக்கிறேன்
விடியலாகி விடியலாகிக் கழிகின்ற பொழுதுகளில்தான்
கடந்ததாகிப் போகுது வயது.
தரித்திரம் பிடித்து ஆட்டுவதாய் என் தாய்
சும்மா இருக்கும் என்னை கண்டிக்க முடியாமல்
என் வீட்டு நிலையை சொல்லிச் சொல்லி பேசுவதும்
எனக்குத் தெரியாமல் இல்லை.
என்ன செய்ய என் இயலாமை ஊனமாகிப் போயிற்று.
ஓர் நாள் என் கோபம்
மாட்டுச்சாண வரட்டியாகி என் இயலாமையை எரிக்கலாம்.
என் எண்ணங்கள் உயர்வதற்கு முன்
இளமை சாம்பலாகி காற்றோடு பறக்கலாம்.
எப்படியாயின் இப்படி நடக்கும்போது கூட
நம் வீட்டில் பிடித்திருக்கும் தரித்திரம்
ஒழிந்துதான் போகுமா என்னும்மா?

2011

❑❑❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே. பிரோஸ்கான்



# பிரிதலின் நாட்குறிப்பு

கூவத்தெரியா சின்னஞ்சிறு
குயிலின் குரல் தளம்புதலை
கைகளுக்குள் அள்ளிக்கொண்டு
நாகை மரத்தடிக் கூண்டில்
திணித்து விட்டுத் திரும்புகையில்
மேகத்திற்கு மேலாக
ஊன்றியெழும்பும் அந்திச் சூரியனின்
நடுவில் குந்தி மேலெழும்பும்
தென்னங் குருத்தின் உச்சியில்
தொங்கி நிற்கிறது
சில உறவுகளான பிரிதலின் நாட்குறிப்பு.
2012

□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பயம்

வலையில் சிக்காத
விலாங்கு மீன் எகிறி விழுந்த
பொழுதொன்றில்
தூண்டிலில் மிரண்டு சட்டென
மாட்டிக்கொண்ட கெழுத்தி மீனின்
கண்களில் தெரிந்து கொண்டேன்
மரணத்திற்கான பயத்தினை.

2012

□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே. பிரோஸ்கான்



# இரக்கமில்லா மழை


அந்தச் சஹாராவின்
வெயில்களைப் போலவே
வெறுப்புற்றுப் பார்க்கிறேன்
இந்த மழைகளையும்.
மழை நாட்களில் அறிவிப்பில்லாமல்
வேலை முடியும் நேரம் வரும்
என் மனைவியின் கோபம் போல.
அவசர அவசரமாக நகர்ந்து
மரங்களின் கீழாகவோ
கட்டிட மறைவிலோ
ஒதுங்குவதற்குள் நனைக்கத் தொடங்கி
விடுகிறது இந்த மழையென்று
நண்பன் சகிப்புக்குள்ளாகி விடுகிறான்.
2012

□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே. பிரோஸ்கான்



# பெண்களுக்குள் கனவுகளும் கூட பொய்தான்


தாயாக முடியாப் பெண் கண்களுக்குள் கட்டுடைத்து
அவள் கனவில் வராத குழந்தை
நேற்றுக்கு முந்தைய நாள்
பால் குடிப்பதாய் நிஜத்தின் வழியிலான உடைத்தலில்
ரகசியமாக அவளான அசைவிலிருந்து அது
மெல்லிய காற்றோடு படர்தலாக
சொட்டுச் சொட்டாய்ப் பால் குடிப்பதான
சுகத்தின் சந்தோசிப்பு திடிரென தீர்ந்தது.
அது கனவின் வெளிப்பாடெனும்
மலைப் பாம்பின் நீளத்திலான நிஜத்தின்
எண்ணவுணர்வில் நிதர்சனமாக அங்கே
கடைசிச் சொட்டுப் பாலும் சேவலின்
கூவலோடு இரவை நக்கிய வெள்ளைப்
பொழுதில் தெரிந்தலாயிற்று
அவளுக்கு.
தாயாக முடியா பெண் கண்களுக்குள்
கனவுகளும் கூட பொய்தான்.
2012

❑❑❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே. பிரோஸ்கான்



# குழந்தையின் ஆசை

பேசத்தெரியாப் பொம்மைகளோடு சிரிக்கவும்
பிடிக்க முடியாத் தூரத்தில்தான்
நிலாயிருக்கிறதென்று தெரியாமலே
சோறூட்டும் போது
பிடித்துக்கேட்டு அழவும்
தனக்குப் பொருத்தமற்ற ஆடையை
உடுத்துக் கொள்ளவும் முடிகிறது
குழந்தைகளால்.


2012

□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே. பிரோஸ்கான்



# மரணம்

புலர்ந்த காலைப்பொழுதில்
உதிர்த்த மாற்றுச் சிந்தனையில்
விழுந்து விழுந்து எழலானேன்,
காகம் கரைந்த உயிர்ச் சத்தத்தின்
மரணப் பயம் எனக்குள் படர்வதாக.
மனசுக்குள் உருகி வடிகிறது அது
கனவோ நிஜமோ எதுவாகவோ
இருக்கலாம்.
பின் இருள் தெருவில்
யாருமற்ற தனிமையில்
மின்கம்ப விளக்கின் ஒளியைச் சுற்றி
உயிர் துறக்கும் பூச்சிகளின்
துடி துடிப்பைப்
பார்த்துப் பயந்து நகர்கிறேன்
தனிமையாய்ப் பயணிப்பதை மறந்து.
இனி..
உயிர்கள் யாவும் மரணிக்கும்
தருணமிங்கு துளிர்த்துவிட்டது
அவசர அவசரமாக இதனையுடைத்து
நான் முந்திக்கொள்கிறேன் மரணமாகி.

2012

❑❑❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே. பிரோஸ்கான்

# ஒரு பயணக் குறிப்பு




அவர்கள் எச்சிலாய் உமிழ்ந்த
கோப வார்த்தையுடனும்
தினம் வஞ்சிப்புக்குள்ளான அதே முகத்துடனும்
வீதிக்கு வந்துவொரு அவமான விரிப்பின்
மேலாகவே நடக்க வேண்டியதாயிருக்கிறது.
எனது பயணப்பாடுகளில் நான் மிதித்த
முள்கூட என் பாதத்தை காயப்படுத்திவிட்டு
ஏளனமாய்ச் சிரிக்கிறது.
படிப்புக்குள் என் குருத்துக் காலத்தை
முழுவதுமாய் புகுத்திவிட்டதன் பின்னும்
பதவிக்குள் சரணடையாத பொறுப்பிலிருந்து
ஏதோ நான் தானாகவே விலகினதாக
அவர்களும் இவர்களுமாய் பார்க்கிறார்கள்.
எவர் குற்றமோ இது?
இதனாலென்னவோ பிடிப்பற்ற வாழ்தலினூடே
எனதான பயணப்படுதல் ஒரு கரு நிழலாய்த்
தொடர்கிறது.
வீதிக் காகங்கள்கூட தன் எச்சத்தை
என் தோள்களைப் பார்த்தே கழிக்கிறது.
எங்களூர் பனிச்சை மரத்தடியில் வெட்டிக்கதை
பேசும் முதுசத்துக்கெல்லாம் இப்போது
பொழுது போக்கே என் கதைதான்.
2012
□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே. பிரோஸ்கான்



# ஒரு காலம் இருந்தது

சட்டி பானை செய்து விளையாடிய களிமண்
குரும்பட்டியோடு தென்னையோலையின் ஈர்க்கில் கொண்டு
இயக்கி மகிழ்ந்த நவீனம் தராத கிளு கிளுப்பை,
பனை நொங்கு நோண்டி உண்டு
பனை வண்டி ஓட்டக் கூட சேர்த்துக்கிட்ட
அஜீஸாவின் புன்னகைச் சப்தம்,
ஆத்தங்கரையில் கெரண்டைக்கால் நீரில்
உச்சி வெயில் விழும் நேரம்
சிலுந்தான் மீன் பிடித்து கழித்த பொழுது,
சின்னப்பாவின் சிறுபோகம் முதல் அறுவடையில்
பொறுக்கிப் பொறுக்கி சேர்த்த நெல்லு,
தகரப் பேணிக்குள் சோறாகிப்போன கதையும்
முருங்கைக் கீரைக் கறியாக்கி பசி தீர்த்த
சின்னதோர் ஒடுக்கத்துப் புதனும் இன்றில்
நுனி நாக்கில் இனிக்கிறது
பழைய டயரியை புரட்டிப் படிக்கும்போது.

2012

❑❑❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே. பிரோஸ்கான்



# உறுத்தல்


மனம் வன்மப்பட்டுக் கொள்கிறது
நாளாந்த விடியலுக்குப் பின்னும்
கடத்துகின்ற பொழுதுகளை நாசுக்காக
வாப்பா பார்வையில் சினப்பதும்
உம்மா அதைப் புன்னகையால்
மறக்கடிப்பதும் தொடர்தலாயிற்று.
படிப்புக் கூட வரவில்லை
தெரியாத இருத்தலில் தொங்கி நிற்பதாய்
உணர்ந்து சலிப்பதும்,
கனவுகளற்று உறங்குவதும்
கண்ணீர் சிந்தாமல் அழுவதுமாய்
ஒரு வளைவுக்கோடான வாழ்தல்.
நீடித்தல் எனக்கானது மட்டுமல்ல
இப்படித்தான் சிலர் படித்தலின்
சுமையோடும் வெறுப்பின் அறுத்தலோடும்
அலைந்து திரிவதும் வாப்பாவின் சம்பாத்தியத்திலான
குற்றவுணர்வுடனும் தலை குனிந்து நடப்பதுமாய்
ஒரு உறுத்தலெனக்கு.
2011

□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# நக்கலடிப்பு

வாசலில் நட்ட ரோஜாவும்
மனம் பரப்பிற்று.
மனசுக்குள் வரைந்து கொண்ட ஓவியம்
நிறம் தீட்டப்படாமலே தொடர்கிறது.
பிடித்த வண்ணத்துப்பூச்சி கையில்
தந்துவிட்டுப் பறந்த பின்னான சகதிபோல்
என் மீதான கோபங்கள் ஒட்டிக்கொள்கிறது.
தும்பியின் பறத்தலாய் வேகமாக
நகரும் காலம்,
வயதையுடைத்தெறிந்து விட்டு
மௌனமாகவே நடக்கிறது.
யௌவனம் நக்கலடிப்பதான நகர்வோடு
இடிபாட்டுக்குள் சிக்கிய பட்டுப்பூச்சி போல
தினம் தினம் குடும்பத்தாரின் சினத்துக்குள்
சிக்கிச் சாகிறேன்


2011

❑❑❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே. பிரோஸ்கான்



# ஒரு தனிமையின் உச்சம்

இரவுப் படுக்கை யாருமற்ற ஒரு தனித் தூக்கம்
ஒவ்வொரு இரவும் இப்படியாய் இருக்க
தனித்தலையும் பறவைபோல் என் நிழலே என்னைத் தூரம்
விட்டுப்போய் நிற்பதாய் உணர்வதான தூக்கமது.
தனிமை மட்டும் துணையிருந்த இரவில் இடிச் சத்தங்களுக்கும்
பூனையின் அலறலுக்கும் பயந்து
தூக்கம் தொலைத்த இரவின் மறுநாள்
யௌவனம் பெருத்துவிட்டதாய் மனசுக்குள்
உளறிக் கொட்டுகிற சில உறுப்புக்கள்
படுக்கையாகும் போது கட்டிலில்
சில வர்ண பொம்மைகளுடன் உறங்குவதாய்
ஒரு திட்டம்.
அது எழுந்த நொடியே நிறைவேறிப் போயிற்று.
இப்போது சின்னதாய்ப் புன்னகை.
தனிமையில்லா ஓர் இறுக்கம் நிகழ்ந்து முடிகிறது
தவறவிட்டு விட்ட ஒரு தனிமையின் உச்சமெனக்கு.
2011

❑❑❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே. பிரேராஸ்கான்





# நான் பெண்ணாகிய போது

நான் பெண்ணாகிப் போன
அந்த நொடிப் பொழுதினில்
பெருத்த உறுப்புக்களின் மாற்றத்திலான சந்தோசம்.
கண்ணாடிகளின் முன்னான கதையாடலில்
குரலின் மாற்றமுற்பட
இன்னுமாய் எனதான மாற்றம்
அழகானதுதான்.
இதற்கப்பாலான நகர்தலில்
இலட்சம் தாண்டிய கனவுகள்
மூளை நரம்புக்குள் வண்ணத்துப் பூச்சி
அமர்ந்து விட்டுப் போனதான உணர்வுகளை
இலவசமாய் அள்ளி வீசிவிட்டுச் செல்வதாய்
ஹோர்மோன்களின் சிலிர்ப்பில் மீண்டும் மீண்டும்
உறையத் தொடங்குகிறது பெண்மையின்
அந்த மேலான மாற்றம்.


2011

□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே. பிரோஸ்கான்



# நஸ்புள்ளாஹ்வின் பழைய வீட்டுக்குப் புதிய மின் இணைப்பு

நேற்றுகளில் எனதான வீட்டின் இருண்மையை
கவலைத் தனமாக யோசித்தலில் என் நண்பனுக்கும்
என் குழந்தைகளுக்குமானதாகவே இருந்தது.
எனதின் இயலாமையை என் குழந்தைகளுக்கு படிப்பு
சொல்லிக் கொடுக்கும் தருணத்திலேயே அறிவேன்.
மகனின் முனகல் மகளின் மாய்ச்சல் அத்தனையும்
குப்பி லாம்பின் மங்கலான வெளிச்சத்தை கண்டுதான்
என்று நான் அறிவுறுத்தப்பட்டிருந்தேன்.
வேலை நாட்களில் அதிவேகச் சமையல் கிடையாது.
விருந்தாளிகளின் விடுமுறை வருகைக்கு
தேநீருக்கான விரைவான நேரம் விறகு வெட்டுவதிலும்
மனைவி வாய்க்காற்று வீசுவதுமாய்ப் போக..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்திலான அறிமுக விசாரிப்புகள் அன்று
குறைவாகவே இருக்கும்.
இரவுகளின் இருப்புக்குள்தான் எனதும் என்
குழந்தைகளதும் ஆத்திரம் மறைந்து கிடக்கும்
நீருக்குள் மீனின் அழுகைபோல்.
மின்சாரம் அடிப்படையாகிப்போன பின்னும்
நீண்ட காலம்தான் நானும் இப்படியாய்
வாழ்ந்து திரும்பி பார்த்தேன்.
என் குழந்தைகள் பக்கத்து வீட்டு ஜன்னல் வழியே
தொலைக்காட்சி பார்ப்பதற்கு நானே காரணம்.
இப்படியாய் மனசு உரசப்பட்டுக் கொண்டேயிருந்தது
பின்னான எனது சரியான முடிவில் இன்றுதான்
எனது ஆத்திரத்தின் வீரியம் விரிந்து குழந்தைகளுக்கு
பிடிக்காத குப்பி லாம்புகளுக்குப் பிரியாவிடையளித்தது.
என்ன சின்ன வருத்தம்,
அந்த குப்பி லாம்புகள் எனது வீட்டு வராண்டாவுக்குள்
விலங்கிடப்படாமல் சிறைவைக்கப்பட்டுள்ளது
எனதானதும் குழந்தைகளதும் ஆத்திரத்தையும் சேர்த்து.
2011

❑❑❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே. பிரோஸ்கான்



# கனவுகளுக்கு திரையிட முடியாது

எனது பரமான்மாவில் துளிர்க்கின்ற
வார்த்தைகளினூடே
கண்மணிக்குள் ஈர்ப்புச் செய்யும் ஒரு வெஞ்சம்
ஜீவான்மாவில் வளர்ந்துவிட
கொந்தளிக்கும் நைறோன்கள்
சொல்லிப் போனது.
கார் காலத்தின் மழையில் ஈசலின்
சிறகுடைப்பும்
கோடையின் வெயிலில்
குளக்கரையின் முகவெடிப்பும்
நிசப்தமான நடு நிசியில் சாத்தானின்
வருகையும்
இப்படியாய் இரவு நீள்கையில்
கொசுக்களின் சீண்டலில்
பயந்துபோய்ச் சுருண்ட போர்வைத் துயிலிலும்
இரண்டரை மணி நேரத் திரைப்படமாய்
வந்து வெளியாகி விடுகிறது இந்தக் கனவுகள்.
2011

□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமில இரவு

புத்தகத் தாள்களாய் ஒவ்வொரு
பக்கத்தையும் புரட்டிப் போகிறேன்.
இன்றைய நாளைய நேற்றைய
கனவுகளைக் கடந்து
வாழ்தலான பங்கீடுகள் சராசரியாக
ஒரு நாள் பகிர்ந்தளிக்கப்படலாம்.
முதலாம் தேதி சம்பளக் கவர்
மனைவியின் கைகளுக்குள்
அடங்கிப்போகும் தருணங்களில்
என்றாகிப் போயிற்று.
இப்படியாய் தொடராத பொழுதுகளில்
சாம்பல் விசிறப்பட்ட முகபாவத்துடன்
அவளைக் காண்பதே அமிலம்.
அப்படியான இரவுகளில் அரிஜனமாய்
தூரப் படுக்கையாகிவிட்டு பசியாறாமல்
நானும் அவளுமாய் ஒரு பெரிய வேட்கையின்
உச்சத்தில் வாழ்தல் கசந்து நிற்பதாய்...
விடியும் பொழுதுக்கு முன்
கடந்து போன இரவுக்குக் கோபத்தை
கொட்டிவிட்டு
அவளான நியாயத்தை உணர்ந்து
தலை குனிகின்றேன்
திருமணத்துக்குப் பின்னும்
பறவைகளைப்போல் தங்கி வாழ்வதாக.

2011

□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே. பிரோஸ்கான்



# இப்படியாயிற்று

நறுக்கி வீசிய நகத்துண்டுகளைப் பற்றி
நான் கவலையாகியது கிடையாது.
வளர்ந்த பின் அழகுக்காக வெட்டி
வீசுகின்ற தலை மயிர் பற்றி
எண்ணிப் பார்த்ததில்லை.
பென்சில் சீவும்போது உடைந்து
சிதறுகின்ற கூர் முனைகள் பற்றி
சிந்தித்ததில்லை.
எழுதித் தீர்த்த பின் பாதுகாக்கத் தெரியாத
பேனாக் குச்சுகளை ஞாபகித்ததில்லை.
இப்படியாய் எமக்கான நன்மை
தருகைக்காய் மாய்ந்து தொலைந்துபோன
பெரிதானவைகளை
நானும் நீங்களும் அவர்களும்
என்றாவது ஞாபகித்து கோபித்ததுண்டா
நாமே நம் மீது.

2011

□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சாத்தானின் சாஸ்திரம்

சாஸ்திரம் படித்துச் சந்தோசித்த நிமிடத்தில்
என் ஆயுள் ரேகையின் கீறல் விழுந்த
எதிர்கால வாழ்தலின் நிஜத்தினை
காசுக்காய் மறைத்து விடியலுக்கு முலாம்
பூசினான் இன்பமளிப்பதாய் ஜோசியக்காரன்.
எனக்கான தெரிதலில் கண்ணீர் பீறிடல்களால்
நானும் எனதான மற்றவர்களும்
அவஸ்தைகள் கண்டதுவே நிஜம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதை அவன் தெரிந்திருக்க நியாயமில்லை
பாவம் பார்த்தலின் அவனது வயிற்றுப் பசிக்காய்
நான் புன்னகை பூத்தபடி
காசை நீட்டி இன்பம் ஊட்டினேன்.
எனக்குள்ளிருந்த உறவுகளிலான உடைப்பு
நான் ஆறுதலற்றுப்போன கதையினை காகம்
கரைந்துபோன தெருவினில் கசிந்து கிடப்பதாய்
யாரோ சொல்லிய சாஸ்திர வார்த்தையினை
நம்புதல் கொண்டு நடக்கிறேன்.
பாதங்களிரண்டும் நேற்று மரணித்துப்போன
நியாயமுற்றவர்களின் நாணய கால் கீறல்களை
மிதித்த படி பயணிக்கின்றது.
யாரும் சொல்வாரில்லை நல்லவர்களின் பாதையிது
பாதத்தைப் பதிக்காதே என்று.–
நான் பாவியாகி நடக்கிறேன்.
சாத்தானின் சிறைப் பிடிப்புக்குள்
சாஸ்திர முறையினை அணைக்கின்றவர்கள்
ஒழியாத வரை நான் இன்பம்
பெறுவதாயில்லை மனச்சாட்சி நிஜமொழிந்தது.
2009

❑❑❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அழகிய ரணத்தின் வழியே

விசும்பிய வாழ்தலில் சருகான இளமை
சமீபிக்கின்ற காலத்திற்கான சாம்பல்
பூத்த எதிர்காலம் பற்றி
நச்சுத் திணறலுடன் ஒரு ஜாமக்கோழி
கவிபாடும்.
தோல்வியில் தேய்ந்துபோன
வாழ்தல் பற்றி நெஞ்சாரம் சுடுதல்
கொண்டு ரீங்காரம் இசைக்கும்
அழுகிய இருதயத்தின் ரணத்தினூடே வழியும்
நேற்றே இழந்து போன மணித்துளிகள்.
கறையான் பிடித்த கண்ணாக்கம்பு போல
உள்ளரிப்பு அதிகரிக்கும் அவஸ்தைகளோடு.
நேற்றைய சந்தோசிப்புக்களுடன்
இன்றைய சோகக் கதையை
போக்க நினைக்கும் சின்னத்தனமான
எண்ணங்களைக் கூட்டிக் குவித்தபடி
பிந்திய இரவொன்றில் நானும்
சில அவர்களும் துயில் தொலைத்து
பல மணித்துளிகளை கொட்டும் பனியில்
கரைத்ததுண்டு
மறக்க முடியா நேர்கோட்டில் நின்று.

2009

□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே. பிரோஸ்கான்



# வருத்தம்

கிணற்றடிப் புழுக்களின் கனவு பற்றியும்

ஈசல்களின் வாழ்க்கைச் சுருக்கம் பற்றியும்

அறியாது போல

பாவம்.

தான் இன்று கல்யாண வீட்டிற்கு

கறியாகப் போவது பற்றியும்

தெரிந்திருக்க நியாயமில்லை

பசிக்காகத் தீனி மேய்கின்ற கோழிகளுக்கு.


2011

❑❑❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே. பிரோஸ்கான்



# காத்திருத்தல்

தாயகத்தில் காலூன்றி நிற்கும்
மேலானவர்களின் சிரிப்பில்தான்
சிறுமைகளின் அழுகை மறைந்து கிடக்கிறது
அதிஷ்டலாபச் சீட்டிலக்கம் போல.

2011

❑❑❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே. பிரோஸ்கான்



# முரண்

தும்பி பிடிப்பதற்கான சண்டையில்
என் பையனும்
பக்கத்து வீட்டுப் பையனும்
வெற்றி கண்டதாக மார்தட்டிக் கொண்ட
நேரத்தில்
இருவர் கைகளிலும் பிடிபட்ட தும்பியின்
உடலும் தலையுமாய் மீதமிருக்க
தாய் கோபத்தணல் பரப்பினாள்
பக்கத்து வீட்டுப் பையனைப் பார்த்து,
தன் மகனின் கையில் சின்னதாய்
நகக்கீறல் விழுந்ததற்காய்.

2011

❑❑❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# தீ குளிக்கும் ஆண் மரம்

போர்வைத் துயிலைச் சுவைக்கும்
தஹஜ்ஜதுடைய பொழுதொன்றில்
வாப்பாவின் உணவிற்கான விழிப்பு
பலருக்கு அபூர்வம்தான்.
ஒரு சொட்டுச் சர்க்கரையை நக்கிக்
கொண்டே தேநீரை அவசர அவசரமாக
அருந்திவிட்டு தொழுகைக்காக உம்மாவின்
தோள்களை நோகாமல் தட்டியெழுப்பி விட்டு
நகரும் போது சுபஹ் அதான் ஒலிக்கும்.
பறவைகள் உணவுத் தேடலுக்காய்
கூட்டம் கூட்டமாய் சப்தமிட்டு உற்சாகமாய்
சிறகடிப்பதும் சேவல்கள் தூக்கம்
களைவதும் போல
வாப்பா மீன் பிடிப்பதற்கான பயணத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழுத்தும் சூரிய வெயிலில் நட்டநடுக்
கடலிலே நின்று கொண்டு சூட்டில்
குளித்து விட்டு மாலை வானம்
கறுத்துக் கொள்ளும் பொழுதில்
உப்புக் காற்றில் ஊறிப்போய்
கோடை குடித்திட்ட ஈரம்போல்
வரண்ட முகத்துடன் வீடு வரும்போது
உம்மாவின் மனசு தீ வைக்காமலே
எரிந்து கொள்வதை நானும்
சகோதரிகளுமாய் கண்டிருக்கிறோம்.
வாப்பா சேமித்த எத்தனையோ கனவுகளை
அந்த உப்புக் கடலில் கழுவி விட்டுத்தான்
வீடு திரும்புவார் அன்றைய உணவுக்கான
பணத்தினை சேமித்த ஆறுதலுடன்.

வாப்பாவின் காய்ந்த வயிற்றை கொஞ்சமாய்
நீராலும் உணவாலும் நிரப்பிக்கொள்வார்.
ராத்திரி மணி எட்டைத் தாண்டியிருக்கும்
சோறு உண்ட கையில் ஈரம் காயும் முன்
அந்தக் கயிற்றையும் வலையையும் தூக்கிக்
கொள்வார் மீண்டும்.
என்ன வாப்பா ராக் கடலுக்குப் போகத்தான்
வேண்டுமா?
நாளைய உணவுக்கான பொருளாதார
மீட்டல் இதுவென்று எந்தக் களைப்பும் காட்டாது
புரிப்போடு பதிலாகுவதெல்லாம் எங்களுக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் நாளாந்த நெருப்புக் குளியல் பற்றி
சிந்தித்து எமக்கான பாதையிலிருந்து நாங்கள் விலகி
விடக்கூடாது என்பதுதான்.
எங்க வாப்பாவின் நாளாந்த பயணப்படுதல்
ஒரு கடிகார சுழற்சிதான்
மரணமெனும் பெட்டரி சார்ஜ் தீரும்வரை.
2012

□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே. பிரோஸ்கான்

# விபச்சாரி பற்றிய முக்காட்டுக் கவிதை நான்கு



## ஒன்று

பட்டாம் பூச்சியாகி
என் உடலழகை ஓவியங்களாலும்
வர்ணங்களாலும் மறைத்து வாழ்ந்தபோது
எனைத் தொடாதவர்களும் ரசிக்காதவர்களுமில்லை.
இன்று கல்லறையில் நிர்வாண வாழ்க்கை
வாழ்கிறேன்,
ரசிப்பதற்கும் தொடுவதற்கும் யாருமற்று.
2011
❑❑❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே. பிரோஸ்கான்



# இரண்டு

கற்பைக் காசுக்காய்க் கரைத்தபோது
இனித்ததுதான்.
கல்லறையாகும்போது இனித்தலின்
எதிர்ச்சொல் கல்லறையின் கதவைத் தட்டி
பயமுறுத்தும் என்று அன்று
எண்ணித் தயங்கியதில்லை நான்.

2011

□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மூன்று

மலர்ந்த பூக்களெல்லாம்
அவை பிரியப்பட்டு
பறிக்கப்படுவதல்ல,
பறிப்பவர்களெல்லாம் அவற்றைப்
பிரியத்தோடு பறிப்பதுமல்ல.
2011
❑❑❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நான்கு


ஒரு விபச்சாரி பற்றியதான
கல்லறை வாசகம்
எழுத முற்படுகையில்,
காகிதம் தடையுத்தரவு பிறப்பிக்க
ஆமோதித்து வெட்கித்தது என் பேனா.

□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே. பிரோஸ்கான்



# ஆறுதல்

என் வீட்டுக்கு முன்பான குட்டையில்
இறால் பிடிப்பதற்கான முயற்சியில்
விடியற் பொழுதிலிருந்து வலை வீசியும்
மாட்டிக் கொள்ளாத இறால்கள் தப்பிப்பதில்
எனக்குக் கோபம்தான்.
இருப்பினும் இறாலுக்கு விரித்த வலையில்
சின்னச் சின்ன ஜப்பான் மீன்கள் மாட்டி இறப்பதில்
எனக்கு உடன்பாடில்லையென்ற என் நண்பனின்
வருத்தப்படுதலுக்கு செவிசாய்த்து மனசுக்குள்
சோகித்தாலும்
வாடகை வலைக்கு கூலி கொடுப்பதற்கான
சிந்தனையில்
மீண்டும் வலையை வீசுகிறேன்.
ஆங்காங்கே சிக்கிய இறால்களைக் கண்டு
சிரிப்பதற்கொன்றுமில்லை
சிக்கிய இறால்களை எடுத்துக் கொண்டு
மீதமான சின்ன மீன்களை குட்டைக்குள் விடும்போதும்
ஆறுதலாகி விடுகிறதுதான் மனசும்.
2011

❑❑❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானும் சொல்கிறேன்

கவிதையாகி உனது பெருநாளும்
எனது பெருநாளும்
சந்தோசம் பெருகும் நேரப் பொழுதினில்
நானும் நீயும்
தொழுகையாய் நானும்
பிரார்த்தனையாய் நீயும்
பலாச் சுளையின் சாயலில் எம்
உறவுகளின் இணைப்பும்
மாதுளையின் நெருக்கத்தில்
உனதான சொந்தங்களின் அணைப்பும்
வானவில்லாகி உனதும் எனதுமான
கனவுடைகளும்
அன்றில் இன்ப வங்கியில்
சேமித்த புன்னகையும்
நீயும் நானும் மற்றும் அவர்களும்
கவிதைகளாகி
உனது பெருநாளிலும்...
எனது பெருநாளிலும்.

2011

❑❑❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே. பிரோஸ்கான்




# தீக் குழைத்து அப்பும் நினைவு

நரம்பு வழியே உன் ஞாபகிப்பு
நண்டுகளின் ஓவியமாய் பதிந்துபோக
துயிலைத் தொலைத்து
சாத்தான் உலாவும் நடுநிசியில்
மறந்து போகவே
விரட்டி விரட்டியடிக்கிறேன் நினைவுகளை
முடியாத போதும்
என்னுள் நகர்ந்து திரியும் ஹோர்மோன்கள்
கோடை குடித்திட்ட ஈரம் போல்
காய்ந்த சருகாய் உணர்வு
பாம்பாய் நெளிந்து சிருஷ்டிக்குரிய
நரம்பு வழியே மீண்டும் மீண்டும்
துளிர் விட்டுப்போகிறது,
மறப்பெய்த நினைக்கும் உனதும்
எனதுமான நேற்றின் பதிவு.
2011

❑❑❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிலதும் பலதுமான சேதி

நேற்றின் ஞாபகிப்புகளை விடாமல்
உரசிச் செல்லும் எனது வீட்டுப் பூனை
நங்கூரம் பாய்ச்சி நிறுத்திய படகுபோல்
கடலின் நடுவில் சமநிலையடையாமல்
அசைவுகள் காட்டும் காற்றின் தீண்டலாய்...

உச்சிக் கடலில் கூட்டமாய் நின்று
குலாவிப் பாடிய மீன்களுக்குள்
சிவப்புக் கசிவையேற்படுத்திய அந்நிய மூளையின்
ஜெயித்தலைக் கண்டு சந்தோசித்த மனிதன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்கடி கண்களைக் குத்தித் துளைக்கும்
ஊசிக் கனவுகள் வரண்ட விழிகளுக்குள்
குருதியைக் கொட்டச் செய்யும்.
வேண்டுமே மூன்று தசாப்தம் இடை விடாது
அழுது வடித்த விழிகளில் கண்ணீர்.

புழுக்களின் பரிணாமம் வண்ணத்துப் பூச்சியென்ற
ஒன்றுக்கே,
ஈசலின் சிறகு உதிர்ப்பு
மீண்டும் வளர்வதற்கே.

பகலிரவாய்த் தோன்றும் கனவுகளில்
சிலது பலித்தும் பலது பலிக்காமலும்
மீதிக்காய் துயில் கொண்டு காத்திருந்தபோது
தூரத்தில் நையாண்டி செய்து மறைகிறது
நேற்றின் கசப்புகள்.
2010

❑❑❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிழடு தட்டிப்போன கனவுகள்

எனதான விழிகளுக்குள் கிழடு தட்டிப்போன
கனவுகள் தாம் கடந்து வந்த பழையதுமான
பாதைகளைப் பற்றி கலந்துரையாடிக் கொண்டது
எலும்புக் கட்டிடத்திற்குள் சிக்கிக் கொண்ட
எனது யௌவனத்திடம்.

மனசு முதிர்தலின் உத்வேகத்திலான பயணத்தில்
அவளையறிந்து கொள்ள முடியாத தவிப்பில்
எனதான இளமை கதறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேற்றைய இதயத்தைத் தொட்டுணர்கிறேன்
நரம்புகள் வழியே விரிகிற ஞாபகிப்புகள்
ஆயிரமாயிரம் புண்களை உடலுனுள்
தந்துவிட்டு கைதட்டிச் சிரித்து வெளியேறுகிறது.
எனது மூளையின் தங்கூசி நரம்பினூடே
சைகை பிறப்பிக்கின்ற அணுக்களின்
சோகத்தோடு இணங்கி வடிகிறது
உன்னிடம் தோற்றுப் போனதற்கான
வலியைக் காட்டிக் கொண்டு.

பின்னான நிர்ச்சலனப் பொழுதொன்றில்
முணுமுணுக்கும் கனவுகளூடைத்துத் துயிலவே
தொண்டையிலிருந்து பயம் நண்டுகளின் ஊருதலாய் நகர
மெல்ல மெல்ல வயதாகிப்போனது என் கனவுகளுக்கும்.
2011

❑❑❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே. பிரோஸ்கான்



# ஈமானியம் கொத்துகிறது மனதை

ஈமானியம் கொத்துகிறது மனதை
விடியலாகச் சொல்லி
சாம்பல் சமூகத்திற்குள்
எழுந்து நிற்கின்றது ஓர்
புதிய பயணத்திற்கான அழைப்பு.
இதுவரை கண்டிடாத எழுச்சி இன்றில்
உத்வேகமாக மணல் புழுதியகற்றி மரக்கிளை நீரில்
கழுவப்படுகின்ற வேர்களைப்போல் ஈமானியம்
கொத்துகிறது மனதை.
புறப்படு தூய்மைக்கான நிஜப்பாதையில்
ஒரு சமூகத்திற்கான விழிப்பு தேடல் அழைப்பு
செய்வதற்கான நாளைய கைதி
நாட்களில் வாய் திறப்பதற்காய்
நெஞ்சை நிமிரத்தி நிற்க எழுந்திடு.
நாம் பீனிக்ஸ் பறவை கிடையாது
நமக்கும் மரணம் ஒரு முறைதான்
பிறப்பு மறுமை உண்மை.
அதோ ஒரு ஈமானியக் கிளை இளைப்பாறுகிறது
வா இளைப்பாறு.


2011

□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே. பிரோஸ்கான்




# கோபம் தீர்ந்து போதல்

கோழிகளுக்கும் வீட்டுப் பூனைகளுக்குமான ஏச்சில்
என் மீதான கோபம் தீர்ந்துபோக
குழந்தை மேலான அவளின் சுழிப்பும்
இனிப்புச் சேராத எனதின் தேனீருமாய்
ராத்திரி நடந்தேறிய கட்டாயப்படுத்தலில்
குற்றவாளியான நான்
வார்த்தை பறிக்கவே..
கோபம் தீர்தலாக
அவளின் மீண்டும் மீண்டுமான
குரல் வழி வார்த்தைகள்
ஆர்ப்பரிக்கின்ற சூடான பேச்சில்
சும்மாச்...சும்மா
குந்திக் குந்தித் தவழுகிறது
எனது தவறு.
2011
❑❑❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அழியாத நேற்று

நேற்று நடந்தவை நாடகமாயிருக்க
மனசுக்குள் பூசலிட்டுப் போனது.
நீ துப்பிய எச்சில் கூட
தீர்த்தமென்று பரிபூரண சுயதிருப்தி
நிலையை அடைந்தேன்.
உன் அழகின் உபாசகனானதே
ஏமாற்றத்தின் வலிமையால் எனது
ஞானக் கதிர்கள் உருகிப்போக
இதயத்தின் சாளரம் வழியே
நீ நடத்தி விட்டுப்போன
நாடகம் அரங்கேறிப் போனது,
எனதின் இயலாமையை
அடையாளப்படுத்திக் கொண்டு.

2011

□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாகரிகம் பூசி

மார்கழிப் பனியின் நனைதலில்
மாதுளைப் பெண்ணே,
தும்பியின் முத்தத்தில் கற்பிழந்த
நிர்ச்சலனப் பொழுதொன்றில் வெட்கப் படர்கை
பாகற் கொடியாய் வளர்ந்து போக
பாவை நீ நிர்வாணியாய் பூமி வந்த கதையும்
மூத்தம்மாவின் ஏச்சிலான ராகத்தில் நீ
மூழ்கிப்போக,
உனது பதினாறாம் பருவம்
மழைக்காலத் தவளையாய் ஆர்ப்பரிக்கும்
சந்தோச நகர்தல் கலப்படமற்றதாக
நீ அப்போது நாகரிகம் பூசி.
2011
❑❑❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே. பிரோஸ்கான்



# முரண்பாட்டின் நிமித்தம்

வீட்டெலிகளின் மேலான முகச்சுழிப்பு
வளர்ப்புப் பூனையின் பழிவாங்கலுடன்
நன்றியின் பெருமிதத்துடன் நான்.
நுளம்புக்கான பயத்துடன்
சிறைப் படுக்கைக்குள் தனித்து நான்
அதோ சின்னக் கிழிசலின் வாயிலாய்
ஒரு நுளம்பு ரத்தத்தின் பசியுடன்
அதுவும் உயிர் துறந்து
நானும் சந்தோசித்து...
எரிச்சலாய் உச்சி வெயிலுக்குத் திட்டியபடி
மரத்தடியில் நிழலுக்காய் அமர்ந்து இளைப்பாறுகையில்
யார் யாருக்கு நன்றி சொல்வது
வீசும் தென்றலுக்கா?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த மரத்தடி நிழலுக்கா?
முரண்பாட்டின் நிமித்தம் இங்கும்
மைதானத்தில் பந்துக்குப் பதிலாய் விளையாடிய
பாம்புக்கு மிதித்தும் அது கடித்ததும்
எது தவறு நீ மிதித்ததா? அது கடித்ததா?
தெரியாத மிதித்தலுக்குப் பாம்பின் மன்னிப்பை
எதிர்பார்க்க முடியுமா?
இது தெரியாத நிலைதனைக் கண்டு
கொண்டு குழம்புகிறேன் தெரிந்த ஒன்றுக்காய்.
போதுமென்ற பெருமிதம்
மிருகத்திற்குத்தான் கிடையாது எதிலும்.
மனிதன் உனக்குமா கிடையாது?
எதற்கு எதற்காக கேள்வி கேட்டு முடிக்கும்முன்
உன் உயிருக்கு உத்தரவாதம் யார் தந்தார்?
அப்போது எதற்குக் குருதிக்குள் பிரிவு பார்க்க
நினைக்கும் விஞ்ஞானத் தனம்.
2010
❑❑❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே. பிரோஸ்கான்





# வாழத் தெரியவில்லையே

நேற்று தெருவோர மரங்கள் உதிர்த்த
இலைகள்போல்
என்னுள் காய்ந்து கிடக்கு நாளை
பற்றிய எமதான கனவுகள்.
வயது முதிர்தலின் நீட்சியில் சிக்கி முக்கி
வாழ்தல் நகர்கையில் வாசனையற்ற
இளமையின் சிறகொடிப்புத் தினம்
காயப்பட்டுக் கொள்ளும் வெறுமையான மனசு.
துருப்பிடித்த கம்பியின் தோற்றத்தை ஒத்த
மனிதம் இன்று தாயகத்தில் நிறைந்து
கல்வியின் உயர்ச்சியில் வயிறு
காயவைத்துப் பலனுமில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வத்தலாகிப் போன தேசத்தின் விலையேற்றத்தில்
செத்தே போனோம்
பூக்கள் பல வாடியே சருகானது.
சிறுவர் தொழில் கட்டாயப்படுத்தல்
சீர்கல்வி துடைத்தெரியப்பட்டு
சிதைந்தே போகிறோம் சிந்தையிலே.
வயிற்றில் விழுந்த பசிக்கோடுகள்
இரண்டு மூன்றாய் உயரப் பொறுமையிழந்தே
போனோம்.
அந்த நொடியில் கொடிபிடித்து
அந்த நொடியே சில்லறைக்காய்
கரைந்து போனது மனிதம்.
தலைமைகளின் சுயநலத்தின் புன்னகை
எங்களின் கண்ணீர்ப் பிரவாகத்தினூடே
நிறைவேறிப் போகிறது இனி என் செய்வது
வாழத் தெரியவில்லையே.
2010
❑❑❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# கோழியும் காகங்களும் பூனையும் நாய்களும்

ராத்திரி உண்டு மீதமான எச்ச சோற்றை
என் தங்கச்சி கோழிகளுக்கென்று வீசுகையில்
அவசர அவசரமாக ஓடிய கோழிகளைக்
கண்ட காகங்கள் ஆரவாரத்துடன்
கூட்டமாய் கூடியதில் பயந்து ஒதுங்கின கோழிகள்.
வீரனான சந்தோசத்துடன் காகங்கள்
நெருங்குகையில் சில பூனைகள்
எரிச்சல் கொள்ளக் காகங்கள் கலைந்தன ஏமாற்றத்துடன்.
பூனைகள் சுதந்திரத்துடன் உண்ண ஆரம்பிக்கையில்
நாலா பக்கமுள்ள நாய்களில் சில ஒன்று சேர்ந்து
பூனைகளை விரட்டியடிப்பதற்கான சண்டையின்
பேரொலியில் நேற்றுக்கு முன்னைய நாள்
என் மூத்த சகோதரிக்கு கிடைத்த குழந்தை
பயந்து அழுததாக சகோதரி நச்சரிக்க,
தங்கச்சி உறுத்தலானாள் இத்தனைக்கும்
இந்த மீதமான சோறுதானே! என்று
கோபத்தை சோற்றை அகற்றுவதில் காட்டினாள்.

2011

□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திப்புக்கு முன்னான ஒப்பந்தம்



உறவில் பாம்பின் புனைதல் போதும்
உனதும் எனதுமான அனலின் எச்சில்
குளிரூற்றி நீ போருக்குத் துணிகையில்
சமாதானம் வேண்டியே உடலினுள்
வெள்ளையணுக்கள் கொடிபிடிக்கும்.
நிர்ச்சலன நிலை உருவாகையில்
நிதானம் இழக்கக் கூடும.
ராத்திரி சிவந்து போக..
விடியலில் ரணமாகிப் போகும் உறவும்
அரிஜனமாய் ஒதுங்குகையில் வயசு
நகமும் சதையுமாகுது.
மீண்டும் உனக்குள் தொலைக்கவே
என் ஒத்த நரம்பு துடிக்குது.
நீயும் ஒப்பந்தம் செய்கிறாய் மணிநேரம் மட்டும்
நான் வியந்து போகிறேன்
ஷெல்கள் சிதைந்து சாகுறேன்.
என் சந்திப்புக்கு முன்னாக நீ பேசிய
தைரிய வார்த்தையை ஞாபகித்து
நான் ஜெயிக்கிறேன்,
நீ தோற்று வெட்கித்து தலை சாய்க்கிறாய்.
2011
□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கடலுக்கொரு கடிதம்

உள்ளத்தை இருட்டுத் துளைத்து விட
நானும் சிலதுமாய் கடந்தவைகளின்
கசப்பான தூசுகளை தட்டிவிட நினைக்கிறேன்.
கடல் தனக்கென இருத்தலை விட்டு
வானத்தை தாண்டுகிற பெருமை
கொண்டெழுந்த செய்தி செவிப்பறைகளை
குயில்களின் குரலிசையால் தந்தியிட்டுப் போனது.
பிஞ்சுகளின் சப்தம் தாய்மார்களின் சலனம்
வேடந்தாங்கலின் பறவைகளின்
ஒன்று கூடலான பேரிரைச்சலால்
ஊரடங்க முகத்தில் மூசாப்பு பவுடர்
போல தனித்தனியாக பூசப்பட்டிருந்த பொழுதது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முள்ளென உறைந்த அந்த நாளில்
கடலை விட்டு கரையைத் தாண்டி
உயிர் குடித்த கதையினை சொல்வதில்
கறல் படிந்த என் மனசுக்கு
அவ்வளவு விருப்பம்.
ஏனெனில் அன்றுதான்
நண்பனும் தங்கையும் தாயும்
இன்னும் யானுமாய் உயிரின் பிரிதல் இறுதியானது.
சொல்லிடத்தான் வேண்டும் சோகத்தின்
ஒட்டு மொத்த வெஞ்சத்தை.
கண்ணீர் பெருங்காற்றாய் திரும்பி வந்தபோது
மையத்துச் சாம்பலினுள் ஒழிந்து கொண்டது அந்த வானம்.
அன்றுதான்,
பூத்த ரோஜாச்செடி நட்டவனின் வதனம்
பார்த்துப் புன்னகைக்கும் முன்னமே
உதிர்ந்து போனது.
கடல் மீன்களின் வருகை எம்மை
சந்தோசப்படுத்தவில்லை.
கடலலைகள் எம் நிலப்பகுதிக்குள் வந்து
ஓய்வெடுத்துப் போனது எமக்காச்சரியமில்லை.
பல்லாயிரம் உயிர்கள் வலையில் சிக்கிய
மீனாய் ஒன்றோடு ஒன்றாய் அடங்கிப்போனதே
சாதி, மதம், இனம், மொழி தெரியாமல்
அதுவே விநோதம்.
கடலே உனதின் நேற்றைய சிரிப்பில்
நாங்கள் அழுது அழுது வடித்த கண்ணீரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஊற்று இன்றுமாய் தீரவில்லை.
சஹாராவில் நிர்வாணமாய் தூக்கியெறிந்த
வலியோடு வெம்மி வெம்மி
நினைவு கூறுகிறோம்,
உன் வருகைக்கு முன்னான
எமதின் உறவோடு கலந்திருந்த
உயிர்களின் சந்தோசிப்புக்களுடன்.

எம் அறிவுக்கு முன் புலப்படாத
உன் வருகை பற்றி இன்னுமின்னும்
எம் நம்பிக்கை சூரியத் துண்டுகள் போல்
காட்சியளிக்கின்றன.
போதுமென என்னால் நிறுத்தி
விட முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் மீதான எனதும்
அவர்களதுமான கோபத்தினை
நாம் இனி மறக்க நினைக்கிறோம்.
அந்தக் குடிகாரப் பொழுதை
உன் இற்றை வரையான மௌனத்திற்கு
காரணம் தெரியாதபோதும்
நாங்கள் பயப்படுவதாயில்லை.
எப்படியாயின் உன் வெஞ்சத்தை
உன்னிடத்திலேயே வைத்துக் கொள்.
மீண்டுமொரு முறை வானம் எட்டத்
துடித்தாய் என்றால் உன் பெருமை
எம் சாப இடியுடன் சில்லுச் சில்லாய்
சிதறிவிடும் என்ற எச்சரிக்கையுடன்
முடித்துக் கொள்கிறேன்
எனதான கோபத்தை மட்டும்.
2011
□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாம்புகளாகவும் சாத்தான்களாகவும்

நேற்றிரவின் பேய்க் கனவில்
நண்பனும் எனதுமான உறக்கத்தில்
பதறியடித்து திகைத்த போதும்
கனவுகளான உறக்கத்தில் பேய்களின்
இசையில் நான் நனைய
தேவதையின் இறுக்கமான பிடியில்
எனது வாய் மொழி இருந்து
விட்டுத்தான் போகட்டுமே பேய்களும்
கனவுகளும்.
அவளுடனான தூக்கத்தின் போதெல்லாம்
எகிப்தின் மம்மியான மௌனம்
அறையில் நிலைத்திருக்க இதழ்கள்
மட்டும் பேசிக் கொள்ளும்.
யாரோடு மட்டுமான தூக்கத்தில்
கனவுகள் எனக்கு பிடிப்பதில்லை
பாம்புகளாகவும் சாத்தான்களாகவும்
வந்து வந்து பயம் தந்துவிட்டு
மறைகிறது.
சிலதுமான நேரத்தில் யாருமற்ற
தூக்கத்தில் பார்வையற்றவனின் கனவுகளாய்
சத்தமாகியும் தொடுதலாகியும் நகர்ந்து
விட்டுச் செல்கிறது இந்தக் கனவுகள்.

2011


□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே. பிரோஸ்கான்

# மலர் பற்றிய மூன்று கவிதைகள்



## ஒன்று

மலரே நீ அழகாய் அந்தச் செடியினில்
மலர்ந்திருப்பதைப் பார்த்து என் கைகள்
பறிக்க முனையும்போது
நீ உனக்குள், நான் பறித்து விடக் கூடாதென்று
இறைவனிடம் ஆயுள் வேண்டி நிற்பதில் எனக்கு உடன்பாடுதான்.
இங்கு இருவரில் ஒருவரினது ஆசையேனும்
நிறைவேறிப்போனதே.
2011

□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இரண்டு


மலருக்காய்க் காத்திருந்த
அவன் கைகள்
ஊனமாகிப்போயிருக்கலாம்
பறிக்கப்பட்ட இன்னொரு கையைக்கண்டு.

2011

❑❑❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மூன்று

மலர் பற்றியதான கவிதையினை
எழுதிக்கொண்டிருந்தபோது
வெளிநடப்புச் செய்து கொண்டிருந்த வண்டுகளின்
கால்களில் சிக்கிக்கொண்ட மகரந்தத்தின் வாசனை
வீட்டுக்கு வெளியே அழைக்க
அழைப்புக்குச் செவிசாய்த்துத் திரும்புகையில்
எழுதிமுடித்த கவிதை மகரந்தத்தைவிட
மனம் பரப்பி நின்றது.
2011
❑❑❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொதி நீர் மேல் எனக்கென்ன கோபம்

தடிமன் பிடிக்கப்பட்ட அவஸ்தையில்
நான் ரொம்ப வருத்தப்பட்டிருந்தேன்
தங்கை நீராவி பிடிப்பதற்கான
கொதி நீரைத் தயார் செய்துவிட்டு
எனையழைத்தாள்.
வீட்டின் திண்ணையில் படுத்திருந்த
என் வாப்பாவின் தூக்கத்தை கெடுத்த
மாதிரியான விசப் பொழுதது.
தங்கையின் கை தடுமாறியதால்
கொதி நீர் கீழே சிதறியது
வாப்பாவின் கைகளைத் தீண்டிய
கொதி நீர் என்னை மட்டுமல்ல
எல்லோரையும் வருத்தத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உச்சத்துக்கு கொண்டு சென்றது.
வாப்பாவுக்கு என்னால் இப்படியாயிற்றேயென
தங்கையின் வருத்தப்படுதல் தொடர
கொதி நீர் என்னைக் காயப்படுத்தினாலும்
அதன் மீது எனக்குக் கோபமில்லை.
சின்னக் கவலை இரண்டு நாளோ
மூன்று நாளோ குணமாக எடுக்கலாம்,
அதுவரை கரைவலைக்குப் போக முடியாதே.
வீட்டின் வறுமை நிலை
வாப்பாவைச் சஞ்சலத்திற்கு உள்ளாக்கியது
தனக்கு ஏற்பட்ட வலியையும் காயத்தையும்
மறைத்துக் கொண்டு,
ஆனால் எனது உம்மாவின் ஆறுதல்
அவங்க கையில் கொட்டிய
கொதி நீர் முகத்தில் படாததுதான்
என்பதாய் என்னிடம் சொல்லி
எல்லாம் நல்லதுக்கே என்றாள்
உதடு கறுக்க.
2012
❑❑❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நெருங்குதல்

முறித்து அடுக்கி மூடிவைத்த
சோளங்கதிர்ச் செடிக்குள்
வெந்து
பெருகும்
வெக்கைக்கு மிக நெருங்கிய
தூரத்தில்தான்...
சம்மதமாகியிருக்கிறது
அவனுக்கும் எனக்குமான
இடைவெளி.

2012

❑❑❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










# தப்பா நினைக்காதீங்க

என் குழந்தைக்கு
இரண்டு சொக்லேட்
என் குழந்தையோடு தோழமையாய்
விளையாடும் பக்கத்து வீட்டுக்
குழந்தைக்கு ஒரு சொக்லேட்
கொடுக்கும் சாதாரண அப்பாதான்
நானும்.

❑❑❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என்னைக் களவாடிய
# அடைமழை இரவில்

அடை மழைக் குளிரிலே
மரத்துப் போன அவயகத்தை
குளிரகற்றியதற்கு நன்றி சொல்லி
நகர்கிறது இளமை.
கூதல் உடலெங்கும் பவுடர் போல
பூசப்பட்டிருக்க மோகச் சுரப்பிகள்
எனது ஒத்த நரம்பினூடே
திடீர்த் திடீரென சலசலப்புக்குள்ளாகிறது.
ராத்திரிகள் சூரிய
இரவுகளாகி விடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூறல் மழையில் சின்னச் சின்னதாய்
நனைகையில் தினம் குளியல் நடத்தலாக
'ச்சீ' என்று சொல்ல முடியாத படி
அடை மழையின்று நேற்று நாளை என்று
தொடர்கையில்...
ஆசை அணுக்கள் இலட்சங்களாகி
அதிகரிக்கிறது.
நேற்றைய புது இரவுகளும்
இன்றில் ஞாபகப் பூக்களாய்
மாறுதலின்றி இனிக்கிறது
அடை மழை இரவுகளாகி...
போர்வைத் தூக்கம் நிறையப் பிடிக்கிறது.
முந்தானை வாசம் இப்போது
ரொம்பவே விரும்பத்தக்கதாகி
விண்ணப்பம் செய்கிறது
மகனின் தங்கச்சியாசைக்காய்.
2012
❑❑❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தப்பிப்பதென்பது யாது

நேற்றுச் செய்த தவறிலிருந்து
எவர் கண்களுக்குள்ளும்
மாட்டிக் கொள்ளாமல்
வீடு வந்ததும்
மாட்டிக் கொண்டேன்
மனச்சாட்சியிடம்.


2012

❑❑❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே. பிரோஸ்கான்



## பலூம்...

ஊதிப் பெருத்த
பலூன் காற்றின்
சிறைப் பிடிப்பு
குழந்தைகளின் சந்தோஷத்திற்கான
ஒன்றென்றாலும்,
அது உடையும்போது
பெருத்த சப்தத்துடன்
காற்று தப்பிப்பதில்
குழந்தைகளுக்கு என்னவோ
ஏமாற்றம்தான்.
2012

□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிஜத்தின் நிழலில் இளைப்பாறும் பிரோஸ்கானின் கவிதைகள்

**கவிதை** வரிகள் நெடுப்பமாக இருக்க வேண்டும், அல்லது சொற்களின் கீழ் சொற்களாக குவிய வேண்டும், கவிதைக்கான தலைப்பு நெடிதாக இருக்க வேண்டும், கவிதை குறுகிய வரிக்குள் மட்டுப்பட்டிருக்க வேண்டும், கவிதை விரசமிக்கதாக இருக்க வேண்டும். இவ்வாறாக கவிதைக்கான பல விதிகளை, கட்டுப் பாடுகளை எல்லைகளை நியமித்து விடுகின்ற ஒரு மாய உணர்வை காண முடிகிறது.

மற்றொரு விடயம், ஒருவருடைய கவிதையை அளவிடுகின்ற முறையின் பின்னணியில் அவருடைய தொழிலும் அவருடைய பொருளாதாரமும் இருக்குமாயின் அது எவ்வளவு பெரிய பலவீனம் என்பது சொல்லத் தேவையற்றது. அல்லது அது எவ்வளவு பெரிய கேளிக்கைக்குரியது என்பதும் மிகச் சாதாரணமாக உணர்ந்து பார்த்தாலே புரிந்து விடும். இன்றுகளில் அது நிகழ்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே. பிரோஸ்கான்

'தீக் குளிக்கும் ஆண்மரம்' கவிதைத் தொகுதி பிரோஸ்கானின் மனதைச் சொல்கிறது. பிரோஸ்கானின் கவிதைகள் அவரின் வாழ்க்கைச் சூழலைச் சுற்றியே அமைந்திருக்கின்றன. தன்னுடைய வாழ்க்கையின் நெருடல்களையும் அவலங்களையும் சொல்வதன் மூலம் சமூகம் உள்வாங்கி இருக்கின்ற அரசியலைக் காட்சிப் படுத்துகின்றார்.

எப்போதுமே தன் நிலையில் இருந்து எழுதப்படும்போது கவிதை கள் உயிர் பெறுவதாக உணர்கின்றேன். பிரோஸ்கான் அவரின் கவிதைகளுக்கு உயிரூற்றி இருக்கின்றார். பிரோஸ்கானின் கவிதைகள் அதீத கற்பனைக்குள்ளிருந்தும் அசாதாரண சிந்தனைக்குள்ளிருந்தும் விடுபட்டிருப்பதையும் அவர் முயற்சிப்பதையும் காண முடிகிறது.

'தீக் குளிக்கும் ஆண்மரம்' என்ற தலைப்பினூடாகச் சொல்கின்ற கவிதைக்கும் என்னுடைய வீட்டுச் சூழலுக்கும் கூட நிறையவே தொடர்புகள் இருக்கின்றன. ஒரு தாய் பிள்ளையைச் சுமப்பதில் வளர்ப்பதில் படுகின்ற கஷ்டங்களைப் பலபேரும் பல கோணங்களில் விபரித்திருக்கின்றோம். ஆனால், அதன் பின்னணியில் இயங்குகின்ற தகப்பன் என்ற பாத்திரத்தின் கஷ்டம் எழுத்துருவில் அநேகமாய் காட்டப்படுவதே இல்லை. பிரோஸ்கான் அதனை அழகாக படம் பிடித்துக் காட்டியிருக்கின்றார். கவிதை, அழகு சம்பந்தப்பட்ட ஓர் மென் உணர்வு என்பதை பிரோஸ்கான் தன் கவிதைகளில் காட்டு கின்றார்.

எந்தவொன்றைச் சொல்லும்போதும் மின்மினிகள் போன்ற சொற்களால் காட்சிப் படிமங்களாகக் காட்டும்போது மனதில் ஓர் கிளர்ச்சியை, ஈர்ப்பை ஏற்படுத்த முடியும் என்பதை உணர்ந்து அப்பாதையில் காலெடுத்து நடக்கின்றார் பிரோஸ்கான்.

*– நீறோ*
*2012.02.20*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறிப்புகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறிப்புகள்

Hemantha Rathnayake

No. 123,


Royal Park,

Rajagiriya



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜே. பிரோஸ்கான் தன் அனுபவங்களை "தீ குளிக்கும் ஆண்மரம்" எனும் தலைப்பில் தோப்பாக்கி நம்முடன் பகிர்ந்து கொள்கின்றார். யாருடனும் பகிர்ந்து கொள்ளா அனுபவங்களில் புதிய பயணம் இருக்காது.

தான் சார்ந்த சூழலில் தன்னைச் சுற்றிய சமூகத்தின் உறவுகளையும் இன்னும் தன்னுடன் முட்டி மோதிய முரண்பாடுகளையும் மனம் திறப்பது ஜே. பிரோஸ்கானின் சுய விமரிசனங்கள் எனச் சொல்லலாம்.

அறபாத், நபீல், சபருள்ளா, தீபச் செல்வன், அகிலன் என நிலம் பெயர்ந்து ஜே. பிரோஸ்கானின் மனம் பெயர்ந்து நெஞ்சில் நுழைகின்றார். "இதுவும் பிந்திய இரவின் கனவுதான்" தொகுப்பிலிருந்து இரண்டாவது தொகுப்பான "தீ குளிக்கும் ஆண்மரம்" நவீன கவிதைகளின் முழுமையான உணர்வுடன் எழுதப்பட்டுள்ளது.

- ஏ. நஸ்புள்ளாஹ் -

ISBN: 978-955-0932-00-9

Price: Rs. 250/-

வெளியீடு:
பேனா பப்ளிக்கேஷன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org